## ஆகஸ்ட் 11

மனன வசனம்

**ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப் படுகிறதென்றும், மோசேயின் நியாயப் பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப் படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதி மானாக்கப்படுகிறான். அப்போஸ் 13:38,39.**

ஆராய்ச்சிக்கு

*அப்போஸ்தலர் 13;*

*2கொரிந்தியர் 4:7-10;*

*ரோமர் 10:1-4;*

*ரோமர் 3:19;*

*அப் 14:1-26;*

*ரோமர் 9-11.*

ஆகஸ்ட் 11 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 7

# பவுலின் முதல் நற்செய்திபயணம்



யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் நற்செய்தி அறிவிக்கவேண்டியிருந்தது. ஆரம்பக்கால யூதக் கிறிஸ்தவர்கள் இதை மெதுவாகத்தான் புரிந்துகொண்டார்கள்; ஆனால் புரிந்ததும் உறுதியடைந்தனர்.

புறஜாதியார் அதிக அளவில் கர்த்தருக்குள் விசுவாசிகளாக மாறின சம்பவத்தை முதன்முதலாக அந்தியோகியாவில் பார்க்கிறோம். அதாவது, அந்தியோகியாவில்தான் புறஜாதியாருக்கான முதல் சபை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தியோகியாவில் கணிசமான அளவுக்கு யூத விசுவாசிகள் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கலா 2:11-13. அந்தச்சபையை ஸ்தாபித்தவர்கள் ஊழியப்பணியில் காட்டிய தீவிரமும், பர்னபா மற்றும் பவுலின் வருகையால் உண்டான உற்சாகமும் அச்சபையை வேகமாக வளரச் செய்தது. யூதேயாவுக்கு வெளியே முதல் முக்கியக் கிறிஸ்தவ மையமாக அது விளங்கியது. சொல்லப்போனால், ஒரு சில விதங்களில், எருசலேமின் சபையைவிட அதன் வளர்ச்சி அமோகமாக இருந்தது.

அப்போஸ்தலர்கள் இன்னமும் எருசலேமிலேயே முகாமிட்டிருந்தார்கள்; ஆனால் கிறிஸ்தவ ஊழியப் பணிகளின் பிறப்பிடமாக அந்தியோகியா மாறியது. பவுல் தன் மூன்று நற்செய்தி ஊழியப்பயணங்களுக்கும் அங்கிருந்துதான் சென்றார்; ஆரம்பத்தில் அங்கிருந்த விசுவாசிகள்தாம் அவருக்கு உதவியாக இருந்தார்கள். அந்த விசுவாசிகளின் அர்ப்பணிப்பினால்தான், இயேசு விரும்பியதுபோல கிறிஸ்தவ மார்க்கம் ஓர் உலகளாவிய மார்க்கமாக மாறியது; அதாவது, ‘சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவானது. வெளி 14:6.

*2018, ஆகஸ்ட் 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு, ஆகஸ்ட் 12**

## சாலமி மற்றும் பாப்போ

அப் 13,14ம் அதிகாரங்களில் பவுலின் முதல் நற்செய்தி ஊழியப்பயணம் பற்றிச் சொல்லப்படுகிறது. எனவே, அப் 13இல் அந்தியோகியாவுக்கு நேராக கவனத்தைத் திருப்புகிறார் லூக்கா. அந்த அதிகாரத்திலிருந்து அப்புத்தகத்தின் முடிவுவரை புறஜாதியார்மத்தியில் பவுல் செய்த ஊழியங்கள்பற்றியே பார்க்கிறோம். தனியொரு சபை கவனமாகத் திட்டமிட்டு, ஊழியப்பணி செய்வதற்காக ஊழியர்களை அனுப்பி வைத்த முதல் நற்செய்தி பயணம் இது. ஆனால் இது விசுவாசிகளின் சொந்த முயற்சியினால் அல்ல, தேவஞானத்தால் சாத்தியமாயிற்று என்பதை லூக்கா குறிப்பிடுகிறார். தேவன் நம்மைப் பயன்படுத்தும்படி அவருக்கு நம்மை ஒப்படைக்கவேண்டும்; அப்போது அவர் செயல்படுவார்.

**சீப்புருதீவில் பவுலும் பர்னபாவும் செய்த ஊழியத்தின் என்னென்ன விஷயங்களை அப் 13:1–12இல் லூக்கா வலியுறுத்துகிறார்?**

ஜெபித்து, உபவாசித்து, நற்செய்தியாளர்களை அனுப்புகிறார்கள். அனுப்பும்முன் அவர்கள்மேல் கைகளை வைக்கிறார்கள்; செய்யவேண்டிய பணியைச் செய்வதற்கு தேவகிருபை கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட, அல்லது அவர்களைப் பரிசுத்தப்படுத்த அப்படிச் செய்திருக்கலாம். அப் 14:26.

அந்தியோகியாவுக்கு அருகில், மத்திய தரைக்கடலின் வடகிழக்கில் சீப்புரு தீவு உள்ளது. பர்னபா அந்தத் தீவைச் சேர்ந்தவர்; ஏற்கனவே அங்கு நற்செய்தி சொல்லப்பட்டிருந்தது; ஆனால் இன்னும் செய்யவேண்டிய பணிகள் ஏராளம் இருந்தன. எனவே, அங்கிருந்து ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.

சீப்புருதீவில் இருந்தபோது ஒரு சமயம், பவுலும் பர்னபாவும் ஒரு ஜெபாலயத்தில் பிரசங்கம் பண்ணுகிறார்கள். பர்னபாவின் உறவினனான யோவான் மாற்கும் உடன் இருந்தார். அப் 15:39; கொலோ 4:10. எங்குச் சென்றாலும் முதலில் ஜெபாலயங்களில்பிரசங்கித்துவிட்டுதான், புறஜாதியாருக்குநற்செய்தியைச் சொல்லுவார் பவுல். இயேசுவானவர் இஸ்ரவேலின் மேசியா என்பதால், முதலில் யூதருக்கு அவர் நற்செய்தியை அறிவித்ததில் ஆச்சரியமில்லை.

சாலமியிலிருந்து மேற்குநோக்கி பயணிக்கிறார்கள். வழி நெடுக அவர்கள் பிரசங்கித்துக்கொண்டே சென்றிருக்க வேண்டும். பிறகு, தலைநகரமான பாப்போவிற்கு வருகிறார்கள். அங்கு மாயவித்தைக்காரனாகிய எலிமா எனப்பட்ட பர்யேசு என்பவனையும், அப்பகுதியின் ரோம அதிபதி செர்கியு பவுல் என்பவரையும் பற்றிய ஒரு சம்பவம் வருகிறது. நற்செய்திக்கு வரவேற்பும் எதிர்ப்பும் இருந்ததை இச்சம்பவம் விளக்குகிறது. ஒரு பக்கத்தில் வெளிப்படையாகவே எதிர்ப்பு வருகிறது; இன்னொரு பக்கத்தில் உயர் அந்தஸ்தில் இருக்கும் புறஜாதியார் உண்மையோடு நற்செய்தியை ஏற்றுக்கொள்கிறார்கள். அந்த அதிபதி மனமாறியதை அப் 13:12 உறுதிப்படுத்துகிறது.

இந்தச் சம்பவத்தில் ஒரு யூதன் சத்தியத்தை எதிர்க்கிறான், ஒரு புறஜாதியான் சத்தியத்தை ஏற்றுக்கொள்கிறான். ஏற்கனவே இருக்கும் கிறிஸ்தவ சபைகளுக்கு 'தற்கால சத்தியத்தை' சொல்வதைவிட, எந்தச் சபையையும் சேராத ஒருவரிடம் சொல்வதுதான் சில சமயங்களில் எளிதாக இருக்கிறது. அதைப் புரிந்துகொள்ள இச்சம்பவம் உதவுகிறதா?

## பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா - பகுதி I

பவுலும் அவரைச் சேர்ந்தவர்களும் சீப்புரு தீவிலிருந்து கப்பலேறி, பம்பிலியாவிலிருந்த இன்றைய துருக்கியின் தென் கடற்கரையோரமுள்ள பெர்கேவுக்குச் சென்றார்கள். லூக்கா இதன்பிறகு இரண்டு முக்கிய மாற்றங்களைச் செய்கிறார். **முதலாவது,** பவுலை முக்கிய நபராகக் காட்டுகிறார். இதற்கு முன்புவரை பர்னபாவைத்தான் முக்கியப்படுத்தியிருப்பார்; **இரண்டாவது,** பவுலின் யூதப் பெயரை (சவுல்) பயன்படுத்துவதைத் தவிர்த்து, பவுல் என்றே சொல்கிறார். அப் 13:9. பவுல் அதிகமாக கிரேக்க-ரோமப் பகுதியில் இருந்தது காரணமாக இருக்கலாம். பெர்கேவிலிருந்து பிசீதியாவிலிருந்த அந்தியோகியாவுக்குச் சென்றார்கள்.

மாற்கு மீண்டும் எருசலேமுக்கே திரும்புகிறார். அப் 13:13. எதற்கு இடையில் பின்வாங்கினாரென்று வேதாகமம் சொல்லவில்லை. ஆனால் எலன் ஒய்ட் பின்வருமாறு எழுதுகிறார்; தங்களுக்கு முன்னிருந்த பாடுகளை எண்ணி அதைரியமடைந்த ‘மாற்கு மிகவும் பயந்தார். தைரியமிழந்தவராக, தொடர்ந்து அவர்களுடன் செல்ல மறுத்து, எருசலேமுக்குத் திரும்பினார்.’’ - *AA, p 170.* பாடுகள் வராது என்று தேவன் ஒருபோதும் வாக்களிக்கவில்லை. இயேசுவின் பணியில் தனக்கு அதிக பாடுகள் உண்டென்பதை ஆரம்பம்முதலே பவுல் அறிந்திருந்தார். அப் 9:16. ஆனால் முற்றிலும் தேவ வல்லமையைச் சார்ந்திருக்கப் பழகினார்; அதுவே அவருடைய பெலத்திற்கான இரகசியம். 2கொரி 4:7-10.

**அந்தியோகியாவில் பவுல் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் என்ன? அப் 13:38.**

புதிய ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள பவுலுடைய பிரசங்கங்களில் அப் 13:16-41இல்தான் முதல் பதிவு உள்ளது. இது பவுலுடைய முதல் பிரசங்கம் அல்ல. மேலும், அவர் அங்குப் பேசினது சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

அந்தப் பிரசங்கத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. **முதல் பகுதி,** இஸ்ரவேலை தேவன் தெரிந்துகொண்டதையும், தாவீதின் சிங்காசனத்தையும்பற்றியது. அப் 13:17-23. யூத விசுவாசிகளின் கவனத்தைத் தன்பக்கம் திருப்புவதற்கு இதைக் கூறுகிறார். **இரண்டாம் பகுதி,** தாவீதின் சந்ததியிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வரும் என்று கொடுக்கப்பட்ட தேவ வாக்குறுதியின் நிறைவேறுதல் இயேசுவே என்பது. அப் 13:24-37. **மூன்றாம் பகுதி,** இயேசுவின்மூலம் கிடைக்கும் இரட்சிப்பைப் புறக்கணிக்கவேண்டாம் என்கிற எச்சரிப்பு. அப் 13:38-41.

பிரசங்கத்தின் மையக்கருத்து வச 38,39-ல் உள்ளது; நீதிமானாக்கப்படுதல் பற்றிய பவுலின் கருத்து அதில் உள்ளது. பாவமன்னிப்பும், நீதிமானாக்கப்படுதலும் மோசேயின் பிரமாணத்தினால் அல்ல, இயேசுவால்மட்டுமே கிடைக்கின்றன. நியாயப்பிரமாணம் ஒழிந்துபோனதாக இங்கு சொல்லப்படவில்லை. நியாயப்பிரமாணத்தால் தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியுமென யூதர்கள் நினைத்திருந்தார்கள்; அதற்கு சாத்தியமில்லை என்பதைக் கூறுகிறார். ரோமர் 10:1-4. நீதிமான்களாக்கும் உரிமை கிறிஸ்துவுக்குமட்டுமே உள்ளது. கலா 2:16.

இயேசுவால் மட்டுமே இரட்சிப்பு என்பதின் அர்த்தம் என்ன? நியாயப்பிரமாணம் நம்மை நீதிமான்களாக்க முடியாது; ஆனால் தேவனுடைய ஒழுக்கப்பிரமாணத்தை நிச்சயம் நாம் கைக்கொள்ள வேண்டும்; இதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?

## பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா - பகுதி 2

நம்மை நீதிமான்களாக்குகிற வல்லமை நியாயப்பிரமாணத்திற்குக் கிடையாது என்பதை அப் 13:38,39 வலியுறுத்துகிறது; இது ஒரு முக்கிய வேதாகமக் கருத்து. ஒழுக்கப்பிரமாணங்கள் பூரண குணங்களை வலியுறுத்துகிறபோதிலும், அவற்றைக் கடைபிடிக்கிறவர்களிடம் பூரணக் கீழ்ப்படிதலை அவற்றால் உண்டாக்க முடியாது. அப் 15:10; ரோமர் 8:3. அப்படியே பூரணக் கீழ்ப்படிதலைத் தரமுடிந்தாலும்கூட கடந்தகாலப் பாவங்களை அவற்றால் நிவிர்த்திசெய்ய முடியாது. ரோமர் 3:19; கலா 3:10,11. இதனால்தான் நீதிமான்களாக்கப்படுவதை நாம் கொஞ்சம்கூடசம்பாதிக்கமுடியாது. இயேசுவின் பாவ நிவாரணபலியை விசுவாசிப்பதால்மட்டுமே அதைப் பெறமுடியும். ரோமர் 3:28; கலா 2:16. தகுதியற்ற நமக்கு அருளப்படும் ஓர் ஈவு இது. கிறிஸ்தவ அனுபவத்தில் கீழ்ப்படிதல் முக்கியமான ஒன்றுதான்; ஆனாலும், அதால் இரட்சிப்பைத் தரமுடியாது.

**ஜெபாலயத்தில் இருந்தவர்கள் பவுலின் செய்தியை எவ்வளவுக்கு ஏற்றுக்கொண்டார்கள்? அப் 13:42-49.**

எச்சரிக்கிறவிதத்தில் பவுல் பேசி முடித்தார்; ஜெபாலயத்திலிருந்த அநேகர் அச்செய்தியால் தொடப்பட்டார்கள். ஆனாலும் அதற்கு அடுத்த ஓய்வு நாளில் நிலைமை தலைகீழாக மாறியது. யூதமார்க்கத்தின் பிரதிநிதிகளாக இருந்த ஜெபாலயத் தலைவர்களாகிய 'யூதர்கள்'தாம் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்க வேண்டும். அவர்கள் பவுலிடம் மோசமாக நடந்துகொண்டார்கள்; பொறாமைதான் அதற்குக் காரணம் என்று லூக்கா கூறுகிறார்.

யூதமார்க்கத்தின் ஒரே கடவுள் கொள்கை, வாழ்க்கைமுறை, ஓய்வுநாள் போன்ற பல விஷயங்கள் முற்காலத்தில் யூதரல்லாத மக்களில் ஓர் ஈர்ப்பை உண்டாக்கியிருந்தன; அவர்கள் மதமாறி யூத விசுவாசத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் விருத்தசேதனம்தான் இவர்களுக்கு இடறுதலாக இருந்தது; அதை அருவருப்பான ஒரு சடங்காகக் கருதினார்கள். அதனால், புற ஜாதியார் பலர் முறையே யூதமார்க்கத்திற்கு மாறாமல் ஜெபாலய ஆராதனைகளில்மட்டும் கலந்துகொண்டார்கள். இவர்கள் 'தேவனுக்குப் பயந்தவர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். அந்தியோகியாவின் ஜெபாலயத்திலிருந்த இவர்களும், மதமாறி யூதமார்க்கத்திலமைந்தவர்களும்தான் பவுலின் செய்தி குறித்த செய்தியை மக்கள் மத்தியில் பரப்பியிருக்க வேண்டும். அப் 13:16,43. அதனால்தான் ஏராளமானவர்கள் திரண்டு வந்தார்கள். யூதமார்க்கத்தைத் தழுவாமலே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது என்கிற உண்மை, அநேகருக்கு இனிப்பாக இருந்தது.

இதனால்தான் யூதத்தலைவர்கள் பொறாமையடைந்தார்கள். நற்செய்தியைப் புறக்கணித்ததின்மூலம் தேவனுடைய இரட்சிப்பைப் புறக்கணித்தார்கள்; மேலும், பவுலும் பர்னபாவும் தங்கள் கவனம் முழுவதையும் முற்றிலும் புறஜாதியார்மேல் செலுத்துவதற்கு வழியுண்டாக்கினார்கள். தேவன் தம் இரட்சிப்பின் திட்டத்தில் தங்களைச் சேர்த்துக்கொண்டதற்காக புறஜாதியார் தேவனைத் துதித்தார்கள்.

## இக்கோனியா

அந்தியோகிவிலிருந்த யூதர்களுடைய தூண்டுதலின்பேரில், உள்ளூர் அதிகாரிகள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் எதிராக ஒரு கும்பலை ஏவிவிட்டு, அவர்களை பட்டணத்தைவிட்டுத் துரத்தினார்கள். அப் 13:50. சீடர்களோ, பரிசுத்த ஆவியானாலும் சந்தோஷத்தினாலும் நிறைந்தார்கள். அப் 13:52. இரு நற்செய்தியாளர்களும் இக்கோனியா பட்டணத்திற்குச் சென்றார்கள்.

**பவுலும் பர்னபாவும் இக்கோனியா பட்டணத்தில் ஊழியம் செய்தபோது என்ன நடந்தது? அப் 14:1-7.**

இக்கோனியாவிலும், தங்கள் வழக்கத்தின்படியே பவுலும் பர்னபாவும் முதலில் யூதர்களுக்குப் பிரசங்கித்துவிட்டு, பிறகு புறஜாதியாருக்குப் பிரசங்கித்தார்கள். பவுல் முதலில் யூதருக்கு நற்செய்தியை அறிவித்ததற்கான முக்கியக் காரணத்தை அந்தியோகியாவிலிருந்த போது தன் பிரசங்கத்தில் கூறினார். அப் 13:16-41. அதாவது, இஸ்ரவேலர் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தார்கள். அதன் மூலம் பல சிலாக்கியங்களைப் பெற்றிருந்தார்கள். ரோமர் 3:2; 9:4,5. தாவீதின் வம்சத்திலிருந்து ஓர் இரட்சகரை எழும்பப்பண்ணுவேன் என்கிற வாக்குறுதியை தேவன் நிறைவேற்றியிருந்தார். யூதர்கள் பலர் நற்செய்தியைப் புறக்கணித்தபோதிலும், யூதர்களில் பலர் மனமாறுவார்கள் என பவுல் நிச்சயமாக நம்பினார்.

ரோமர் 9-11இல், 'இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே' என்று கூறுகிறார். ரோமர் 9:6. சில யூதர்கள் மனமாறியதுகூட தேவனுடைய கிருபையினால்தான். தேவன் தம் மக்களைப் புறக்கணித்துவிட வில்லை; ஆனால், 'இக்காலத்திலேயும் கிருபையினால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது.' ரோமர் 11:5. ஏராளமான யூதர்கள் நிச்சயம் ஒரு நாள் இயேசுவை விசுவாசிப்பார்கள் என்கிற நம்பிக்கையுடன் புறஜாதியாருக்கு நற்செய்தியை பவுல் தொடர்ந்து பிரசங்கித்துவந்தார்.

'அப்போஸ்தலரில் சொல்லப்படுவதுபோன்ற பாணியை பவுல் ஏன் பின்பற்றினார் என்பதை ரோமர் 9-11இல் அவர் முன்வைக்கும் வாதம் தெளிவாக விளக்குகிறது; மேலும், ஒவ்வொரு தலைமுறையிலும் அப்போது வாழ்கிற கிறிஸ்தவர்களும் அவிசுவாசிகளான யூதர்களுக்கு சாட்சிபகர வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.' - டேவிட் ஜி. பீட்டர்ஸன்.

அந்தியோகியாவில் இருந்ததுபோலவே இங்கும் சூழ்நிலைகள் இருந்தன. முதலில் புறஜாதியாரும் யூதர்களும் பவுல் பிரசங்கித்த நற்செய்தியை ஏற்றுக் கொண்டார்கள்; ஆனால் இங்கும், உள்ளூர் யூதத்தலைவர்களாக இருந்திருக்கக் கூடிய அவிசுவாசிகளான யூதர்கள் புறஜாதியாரைத் தூண்டிவிட்டு, நற்செய்தியாளர்களுக்கு எதிராக பகையை விதைத்தார்கள்; மக்கள் மத்தியில் பிரிவினையை உண்டாக்கினார்கள். பவுலையும் பர்னபாவையும் தாக்கி, கொல்வதற்கு எதிரிகள் திட்டமிட்டதை அறிந்ததும், அடுத்த பகுதிக்கு இருவரும் செல்கிறார்கள்.

நற்செய்தியைக் கேட்பதைவிட, இயேசுவின் நாமத்தை அறிவிப்போரின் வாழ்க்கையில் அந்நற்செய்தியின் விசுவாசம் காணப்படுவதை யூதர்கள் காணவேண்டும். உங்களுக்கு அருகில் யாராவது யூதர்கள் வாழ்ந்தால், அவர்களுக்கு எப்படிப்பட்ட சாட்சியைப் பகிர்வீர்கள்?

## லீஸ்திரா, தெர்பை

பின்னர், பவுலும் பர்னபாவும் லீஸ்திராவுக்குச் செல்கிறார்கள்; இது இக்கோனியாவுக்கு தென்மேற்கில் 29 கி.மீ. தொலைவில் அதிகம் அறியப்படாத ஒரு கிராமமாகும். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார்கள். அப் 14:6,7,15. அங்கு நடந்த ஒரு சம்பவத்தை லூக்கா பதிவுசெய்கிறார். அதாவது, பிறப்பு முதலே சப்பாணியாய் இருந்து, பிச்சையெடுத்து வந்த ஒருவனை பவுல் குணமாக்கினதையும், அதன்பிறகு நிகழ்ந்த நிகழ்வுகளையும் கூறுகிறார்.

**பவுல் செய்த அற்புதத்தால் அந்த மக்கள் நடந்துகொண்ட விதமானது, அவர்கள் அறியாமையைக் காட்டுகிறது? அப் 14:5–19.**

அற்புதத்தைக் கண்டு அசந்துபோன மக்கள், பவுலையும் பர்னபாவையும் தேவர்களென நினைத்தார்கள். பர்னபாவை, கிரேக்க வழிபாட்டு ஸ்தலத்தின் பிரதான தெய்வமான **ஜீயஸ்** என்றும், பவுலை ஜீயஸின் உதவியாளனாகிய **ஹெர்மீஸ்** என்றும் கருதினார்கள். அவர்களுக்குப் பலிகளைச் செலுத்த மக்கள் விரும்பினார்கள். **ஜீயஸை** ரோமர்கள் **ஜூபிடர்** என்பார்கள்; **ஹெர்மீஸை** ரோமர்கள் **மெர்க்கூரி** என்பார்கள்.

இந்த இரு தேவர்களும் மனிதர்கள்போல வேடமணிந்து, அங்குள்ள பிரிகியா மலையிலிருந்த ஒரு பட்டணத்திற்கு வந்து, ஓய்வெடுக்க இடம் தேடினதாக லத்தீன் கவிஞரான ஓவிட் எழுதியிருக்கிறார். கி.மு. 43 - கி.பி. 17/18. ஏழைகளான வயதான தம்பதியர் அந்தத் தேவர்களை அன்புடன் உபசரித்ததாகவும், மற்றவர்கள் அவர்களிடம் இரக்கமின்றி நடந்துகொண்டதாகவும் அந்தக் கதை கூறுகிறது. மாறுவேடத்தில் வந்திருந்த அந்தத் தேவர்களை அவர்கள் அன்புடன் உபசரித்ததால், அவர்கள் வீட்டை ஒரு கோவிலாக மாற்றி, அவர்களை பூசாரிகளாக்கினார்களாம்; பட்டணத்தின் மற்ற பகுதிகளை முற்றிலும் அழித்தார்களாம்.

அந்தக் கதை அப்பகுதியில் பிரபலம் என்பதால், பவுல் அற்புதம்செய்ததும் அவ்வாறு நடந்துகொண்டார்கள். அதனால்தான், அந்த நற்செய்தியாளர்களை குணப்படுத்துகிற கடவுளான **அஸ்க்லேபியஸ்** என்று கருதாமல், **ஜீயஸ்–ஹெர்மீஸ்** என்று நினைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களை வழிபடுவதற்கு பவுலும் பர்னபாவும் அனுமதிக்கவில்லை. கடைசியில், அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து வந்த எதிரிகள் சிலர் அந்தச் சூழ்நிலையை மாற்றி விடுகிறார்கள். பவுலைக் கல்லெறிந்து, அவர் செத்துவிட்டாரென நினைத்து, விட்டுச் செல்கிறார்கள்.

**பவுலும் பர்னபாவும் இறுதியாக எங்கு சென்றார்கள்? அப் 14:20–26. தாங்கள் திரும்பிச் செல்லும்போது அவர்கள் செய்தது என்ன?**

‘நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்’ என்று பவுல் சொன்னார். அப் 14:22. இதன் அர்த்தம் என்ன? பவுல் இங்குச் சொல்வதை உங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறீர்களா? முக்கியமாக, உங்களுக்கு எப்படிப்பட்ட உபத்திரவம் நேரிட்டாலும், விசுவாசத்தில் வளருவதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

'இயேசு இப்பூமியில் வாழ்ந்தபோது, பிறரை ஒதுக்கும் தன்மையை யூதர்களிட மிருந்து அகற்ற முயன்றார். நூற்றுக்கதிபதியும் சீரோபேனிக்கேயா பெண்ணும் மன மாறிய சம்பவங்கள்தாம் இஸ்ரவேல் மக்களுக்கு வெளியே இயேசு செய்த அற்புதங் கள் ஆகும். ஆனால், புறஜாதியாருக்கு தொடர்ந்து ஊழியம் செய்வதற்கான நேரம் இப்போது வந்திருந்தது; அவர்கள் எல்லாருமே நற்செய்தியை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள்; அர்த்தமுள்ள விசுவாசத்தைக் காட்டின வெளிச்சத்திற்காக தேவனை மகிமைப்படுத்தினார்கள். யூதர்களின் மனக்காழ்ப்பும் அவிசுவாசமும் தேவனுடைய நோக்கத்தைக் கெடுக்கமுடியவில்லை; பழைய ஒலிவமரத்தோடு புதிய இஸ்ரவேல் ஒட்டவைக்கப்பட்டது. அப்போஸ்தலர்களை ஜெபாலயங்களில் அனுமதிக்கவில்லை; ஆனால், வீடுகள் அவர்களுக்காகத் திறக்கப்பட்டன; புறஜாதியாரின் பொது இடங் களும் தேவ வார்த்தை பிரசங்கிக்கப்படும் இடங்களாயின.' – *EGW, LP, p 51.*

'தங்கள் ஊழியமுயற்சிகளில் எல்லாம் கிறிஸ்துவைப்போல தங்களையே தியாகம்செய்யவும், ஆத்துமாக்களுக்காக உண்மையோடு பிரயாசப்படவும் பவுலும் பர்னபாவும் முயன்றார்கள். விழிப்போடும் வைராக்கியத்தோடும் களைப்பின்றி பாடுபட்டார்கள்; தங்கள் சுயபுத்தியைச் சாரவில்லை; தங்கள் வசதியைத் தேடவும் இல்லை; வியாகுலத்தோடு ஜெபித்து, அயராமல் பாடுபட்டு, சத்தியத்தை விதைத் தார்கள். அத்தோடு, நற்செய்தியில் உறுதியுடன் தரித்திருக்க தீர்மானித்த அனைவருக் கும் விலைமதிப்பற்ற நடைமுறை அறிவுரையை வழங்கினார்கள். ஊக்கமான ஆவி யும், தேவ பயமும் புதிய சீடர்களின் மனதில், நற்செய்தியின் முக்கியத்துவம்குறித்து அழியாத ஒரு தாக்கத்தை உண்டாக்கின.'' – *AA, p 186.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *சூழ்நிலைகள் கடினமாகின; மாற்கு தப்பி ஓடுகிறார். பவுலுக்கும் பர்னபாவுக்கும் இதனால் தர்க்கமே உண்டாயிற்று. பர்னபா அவரை மீண்டும் பயன்படுத்த விரும்புகிறார்; பவுல் விரும்பவில்லை. அப் 15:37. ஆனால், பல வருடங்கள் கழித்து, 'மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்' என்று பவுல் எழுதுகிறார். 2தீமோ 4:11. சில சூழ்நிலைகளில் தங்கள் அழைப்புக்கு உண்மையின்றி நடந்துகொள்கிறவர்களை நாம் எவ்வாறு நடத்தவேண்டும்?*

2. *லீஸ்திரா மக்கள் பவுலையும் பர்னபாவையும் தேவர்களென நினைத்தபோது பவுலும் பர்னபாவும் என்ன செய்தார்கள்? அப் 14:14-18. தேவன் அற்புதம் செய்ய, அதன் புகழை நாம் பெற்றுக்கொள்ள தூண்டுதல் வரும்போது என்ன செய்யலாம்?*

3. *அப் 14:21-23 இல் பவுலும் பர்னபாவும் செய்ததை வாசியுங்கள். புதிதாக மனமாறி யவர்களை விசுவாசத்தில் பெலப்படுத்தும்படி தனிநபர்களாகவும் சபையாகவும் நாம் என்ன செய்யலாம்?*

4. *மனித பாரம்பரியங்களிலும், வழிவழியாக வந்த நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்த மதத்தலைவர்கள்தாம் பவுலை எதிர்த்தார்கள். இதேபோல நாமும் மாறிவிடா திருக்க என்ன செய்யலாம்?*